# 9 திருமுறைகள்

திருமுறைப் பாடல்கள் இறைவனுடைய பெருமைகளைப் பேசும் பாடல்கள். பாடுவோரையும், கேட்போரையும் இறையுணர்வில் ஈடுபடச் செய்யும் ஆற்றல் தோத்திரப்பாடல்களுக்கு உண்டு. வேத மந்திரங்களைக் கொண்டு மாந்திரிகர்கள் பல சாதனைகளைச் செய்வதைப் போன்று திருமுறைப் பாடல்களைப் பாடுவதனால் எம்மிடம் இறைபக்தி, மன நிம்மதி, ஆன்மீக உணர்வு என்பன மேலோங்கும். இம்மை மறுமை நலன்களை அளித்து வீடுபேற்றினையும் வேண்டுவோர்க்கு வேண்டுவனவற்றை விரைந்து அளிப்பன.

**பதிக வரலாறு**

திருஞானசம்பந்தப் பெருமான் வணிகனது விடந்தீர்த்து அவனுக்கு மணவாழ்வு வகுத்துத் திருமகலில் எழுந்தருளியிருந்தார்கள். அப்போது சிறுதொண்டநாயனார் வந்து மீட்டும் தமது ஊருக்கு வரவேண்டும் என விண்ணப்பித்தார். பிள்ளையார் மற்றத்தலங்களையும் சென்று வழிபட வேண்டும் என்ற திருவுள்ளக் குறிப்போடு மருகலானடியைப் போற்றத் திருக்கோயிலுள் சென்றார்கள். அப்போது மருகற்பெருமான் திருச்செங்காட்டங் குடிக் கணபதியீச்சரத்திலுள்ள திருக்கோலத்தைக் காட்டியருள இப்பதிகத்தைப் பாடினார்கள். இங்கேயே அக்கோலத்தைக் காட்டியருளிய உள்ளக் குறிப்பை உணர்த்திச் சிறுதொண்டர்க்கு விடை கொடுத்தனுப்பினார்கள். இப்பதிகம் திருமருகற்பெருமானைக் கணபதியீச்சரங் காமுறக் காரணம் என்ன? என்று வினாவுவதாக அமைந்தமை வினாவுரையாயிற்று.

**1. திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் தேவாரம்**

**(அ) தலம்: திருமருகலும் திருச்செங்காட்டங்குடியும் பண்: நட்டபாடை**

திருச்சிற்றம்பலம்

அங்கமும் வேதமும் ஓதுநாவர் அந்தணர் நாளு மடிபரவ
மங்குல் மதிதவழ் மாடவீதி மருகல் நிலாவிய மைந்த சொல்லாய்
செங்கய லார்புனற் செல்வமல்கு சீர்கொள் செங்காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி யேந்தியாடுங் கணபதி யீச்சரங் காமுறவே.

திருச்சிற்றம்பலம்

**பொழிப்புரை:**

வேதங்களையும் அவற்றின் அங்கங்களையும் அத்தியயனம் செய்யும் பிராமணர்கள் திருவடிகள் எப்போதும் துதிக்க மாட மாளிகைகள் நிறைந்த வீதியுள்ள திருமருகலில் உறையும் வல்லாளரே, நீர்வளமும் செல்வச் செழிப்பும் மிகுந்த செங்காட்டங்குடியிலே, அனல்தாங்கிக் கூத்தாடும் ஈசுவரன் அமர்ந்துள்ள கணபதீச்சரம் மீது மையல் கொள்ளலாமா? விடை கூறுவீராக.

**(ஆ) பதிக வரலாறு**

தென்னாட்டமண்மாசு அறுத்து, திருநீறே போற்றுவித்த திருஞானசம்பந்தர், மீண்டடைந்து, திருப்புகலியில் திருதோணி நாதர்கோயிலைத் தொழுது, உள்ளம் உள் அலைத்து எழும் ஆனந்தம் பொழியப் பணிந்து ஏந்திப் பாடியது இத் திருப்பதிகம்.

**தலம் - திருக்கழுமலம்** **பண் - பழம்பஞ்சுரம்**

திருச்சிற்றம்பலம்

உற்றுமை சேர்வது மெய்யினையே உணர்வது நின்னருள் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே கனல்விழி காய்வது காமனையே
அற்றம் மறைப்பது முன்பணியே அமரர்கள் செய்வது முன்பணியே
பெற்று முகந்தது கந்தனையே பிரம புரத்தை யுகந்தனையே

திருச்சிற்றம்பலம்

**பொழிப்புரை:**

இறைவரே! உமாதேவியார் பிரியாது பொருத்தி இருப்பது உம் திருமேனியையே. சிவஞானிகள் உணர்ந்து போற்றுவது உமது பேரருளையே. கற்றுணர்ந்த துறவிகள் வெறுப்பது மனைவி முதலிய குடும்பத்தையே. நெற்றிக்கண் எரித்தது மனமதனையே. உமது பெருமானையே. நீர் திருப்பிரமபுரம் என்னும் திருத்தலத்தில் விரும்பி வீற்றிருந்தருளுகின்றீர்.

**2. திருநாவுக்கரசு நாயனார்**

அப்பர் பல தலங்களையும் தரிசித்துக் கொண்டு சிதம்பரத்திற்கு வந்தபோது அவராற் பாடப்பட்ட பதிகத்தில் ஒரு பாடல் கீழே தரப்படுகின்றது. நடராசப் பெருமானின் அற்புதத் திருக்கோலத்தைக் காணும் பேறு கிடைக்க வேண்டுமென பாடியுள்ளார்.

**திருநாவுக்கரசு நாயனார்**

**(அ) தலம் : சிதம்பரம்** **பண் - திருவிருத்தம்**

திருச்சிற்றம்பலம்

குனித்த புருவமுங் கொவ்வைச் செவ் வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போன் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற் பாதமும் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே யிந்த மானிலத்தே.

திருச்சிற்றம்பலம்

**பொழிப்புரை :-**

வளைந்த புருவங்களையும் கொவ்வைப்பழம் போலும் சிவந்த வாய். இனிய புன்னகை, குளிர்ச்சியான சடை, பவளம் ஒத்த திருமேனி; அத்திருமேனியில் விளங்கும் பால் போன்ற திருநீறு; உயிர்க்கு நல்லினிமை பயக்கும் தூக்கிய திருவடி ஆகியன இத்திருநடன நிகழ்ச்சியைக் காணப்பெறின் வேண்டா எனவெறுத்தொதுக்கும் மனிதப் பிறவியும் வேண்டியதே எனக்கு.

**(ஆ) பதிக வரலாறு**

பெருமான் தூண்டு தவ விளக்கனையாராகிய திலகவதியார் வேண்டுகோளின் வண்ணம், சமண மதத்தைப் பற்றி நின்ற சுவாமிகளுக்குச் சூலைநோய் கொடுத்து ஆட்கொண்டு செய்தியறிந்த சமணன் தம் சமயம் வீழ்ந்தது என மருண்டனர். இத்திறம் அறிந்திடியின் வேந்தனும் வெகுண்டு சைவனாகி நம் விருத்தியும் தவிர்க்கும் என்றஞ்சி அரசனிடம் சென்று, தருமசேனன் பிணிவுற்றாராய்ச் சடையானுக்களாய் நின்சமயம் அழித்தார். அவரை அழித்தல் வேண்டும் என்றனர். பல்லவனும் மந்திரிகளை நோக்கி பொருள் கொண்டு விடாது தரும சேனரை கொண்டு வாரும் என புகன்றான். அரசன் பணியைச் சிரமேற்கொண்ட அமைச்சர் அதிகைப்பதி சென்று அரசன் ஆணையைத் தெரிவித்தபொழுது அதற்கு மறுமொழியாகப் பாடியருளியது இத்திருப்பதிகம்.

குறிப்பு - இத்திருப்பதிகத்தினால், சிவபிரானுக்கு அடியவராயினாரது பெருமை இனிது விளங்கும்.

திருச்சிற்றம்பலம்

நாமார்க்கு குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணிய றிவோம் பணிவோம் அல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பம் இல்லைத்
தாமார்க்கும் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே.

திருச்சிற்றம்பலம்

**பொழிப்புரை :-**

நாம் யாருக்கும் குடிமகனாக இரந்து அடிமையாவதில்லை. யமனுக்கு அஞ்சமாட்டோம் பாவங்களால் சூழப்படுவதில்லாமையால் நரகதுன்பமும் எமகில்லை, பிறதுன்பம் ஏதுமில்லை, மகிழ்ச்சியுடன் இருப்போம், பிணியற்று இருப்போம், யாருக்கும் பணியமாட்டோம், எந்நாளும் இன்பமே அன்றி துன்பமில்லை, யாருக்கும் ஆட்படாதவராகிய சங்கரன் சங்கினால் ஆகிய குழை அணிந்தவர் அத்தலைவருக்கே நாம் ஆளாகினோம், அப்பெருமானுடைய திருவடியை அடைந்தோம் ஆகையால் நாம் யாருக்கும் கட்டுப்பட்டவர் அல்லர்.

**3. சுந்தரமூர்த்தி நாயனார்**

சுந்தரமூர்த்தி நாயனார் திருவொற்றியூரின் எல்லைத் தாண்டியவுடனே கண் இரண்டும் மறைந்தன. எனவே, அவர் இறைவனிடம் முறையிட்டுப் பதிகம் பாடினார். திருவேகம்பத்தில் இடக்கண்ணைப் பெற்றார். பின் பல தலங்களையும் தரிசித்துக் கொண்டு திருவாவூரை அடைந்தார். அங்கே பூங்கோயிலிலுள்ளே சென்று பூமியில் வீழ்ந்து எழுந்து வணங்கி, கோயிலினுட் சென்று தியாகேசப் பெருமானை ‘‘மற்றைக் கண் தாரீர்’’ எனப் பாடினார். இறைவனுக்கும் சுந்தரருக்கும் இடையே உள்ள தோழமைச் சிறப்பைக் காட்டுவது இத்திருப்பதிகம். இத்திருப்பதிகத்தின் முதலாவது

பாடலை இங்கே பார்ப்போம்.

**(அ) தலம் - திருவொற்றியூர் பண் - தக்கேசி**

திருச்சிற்றம்பலம்
அந்த ணாளனுன் அடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரண மாக
வந்த காலன்தன் ஆருயி ரதனை
வவ்வினாய்க் குன்றன் வண்மைகள் டடியேன்
எந்தை நீஎனை நமன்தமர் நலியில்
இவன்மற் றென்னடி யானென விலக்கும்
சிந்தையால் வந்துன் திருவடி யடைந்தேன்
செழும் பொழில்திருப் புன்கூ ருளானே
திருச்சிற்றம்பலம்

**பொழிப்புரை:**

வள்ளிய சோலைகளையுடைய திருப்புன்கூரில் எழுந்தருளியிருப்பவனே, முனிவன் ஒருவன் உன்னை அடைக்கலமாக அடைய, அவனைக் காத்தல் நிமித்தமாக, அவன் மேல் வந்த கூற்றுவனது அரிய உயிரைக் கவர்ந்த உனக்கு அடியேனாகிய யான், எனது அவ்வாற்றலையறிது, என்னையும் இயமன் தூதர்கள் வந்து துன்புறுத்துவார்களாயின், என் தந்தையாகிய நீ, இவன் என் அடியான், இவனைத் துண்புறுத்தாதீர் என்று சொல்லி விலக்குவாய் என்னும் எண்ணத்தினால் வந்து உன் திருவடியை அடைந்தேன் என்னை ஏற்றுக்கொண்டருள்.

**(ஆ)பதிக வரலாறு**

சுவாமிகள், திருத்துருத்தியிலிருந்து திருவாரூருக்கு எழுந்தருளி, பரவையுண்மண்டளிப் பெருமானைப் பணிந்து, தூதுவாயா என்று தொடங்கும் திருப்பதிகம் பாடி, பின்னர், திரு மூலட்டானரை வழிபட அர்த்தயாம வழிபாட்டிற்குச் செல்லும் பொழுது, அன்பர்கள் எதிரணையக்கண்டு அயலார் வினாவுவது போல, ‘குருகுபாய’’ என்று தொடங்கும் திருப்பதிகம் பாடி, திருத்தேவாசிரியன் முன் வணங்கி, கோபுரத்தை கைதொழுது, உள்புகுந்து, பூங்கோயிலை வணங்கி, அவனியில் வீழ்ந்து எழுந்து தொழுது, ஆழ்ந்த தூயக்கடலினை நின்றடியேனை எழுந்தருளிக் கண்தாரும். என தாழ்ந்து திரு மூலட்டானம் சேர் பிஞ்ஞகனைக் கண்ணாற் பருகுதற்கு மறைக்கண் தாரீர் என வணங்கிப் பாடியருளியது இத் திருப்பதிகம். இதில் பாடல் தோறும் வாழ்த்து போதீர் என்று கூறியுள்ள தோழமை கருதத்தக்கது. குறிப்பு - இத் திருப்பதிகம் நுதலிய பொருள், இதன் வரலாற்றானே விளங்கும்.

**தலம் - திருவாவூர் பண் - செந்துருத்தி**

திருச்சிற்றம்பலம்
மீளா அடிமை உமக்கே ஆளாய்ப்
பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ள கனன்று
முகத்தால் மிகவாடி
ஆளாய்இருக்கும் அடியார் தங்கள்
அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவா ரூரீர்
வாழ்ந்து போதீரே.
திருச்சிற்றம்பலம்

**பொழிப்புரை:**

*திருவாரூர் இறைவா, நீங்காத அடிமைத் தொண்டு செய்து என்றும் உமக்கே ஆட்பட்டு நிற்கும் அடியார்கள் பிறரிடம் எதையும் வேண்டமாட்டார்கள். துன்பம் நேரும் பொழுது, மூண்டு எரியாது உள்ளே வெந்துகொண்டிருகின்ற நெருப்பைப்போல, மனதால் வருந்தி முகம் வாடி நிற்பார்கள். அவர்கள் தம் துன்பத்தை உம்மிடம் வாய் திறந்து சொல்லும்பொழுது நீர் பேசாதிருக்கின்றீர். இது உமது தன்மையாகில் நீர் இனிது வாழ்வீராக!*

**04.மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம்**

*இறைவனைச் சிக்கெனப் பிடித்தமையைக் கூறும் பத்துப் பாடல்களைக் கொண்டமையாற் பிடித்தபத்து எனலாயிற்று. இறைவனை விடாது பற்றிநிற்றலே முத்திப்பேறு. இதுசீர்காழி என்னும் தோனி புரத்தில் அருளிச்செய்யப்பட்டது. '' திருவாசகத்துக்கு உருகாதார் ஒருவாசகத்துக்கும் உருகார்'' என்பதற்கு இப்பிடித்தபத்து ஓர் எடுத்துக்காட்டாகும்.*

*படிக்கும் எவரது உள்ளத்தையும் உருக்கும் தன்மைபொருந்திய மணிவாசகரின் திருவாசகத்தில் விளங்கு மணிகளுள்ளே ஒரு சிறந்த மணியாகும். இத்திருப்பாடல். (அ)*

திருச்சிற்றம்பலம்

*பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்*
*பரிந்துநீ பாவியே னுடைய*
*ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி*
*உலாப்பிலா ஆனந்த மாய*
*தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த*
*செல்வமே சிவபெரு மானே*
*யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்*
*எங்கெழுந் தருளுவ தினியே*

திருச்சிற்றம்பலம்

*''என் செல்வமே, சிவபெருமானே, யான் உன்னை இறுகப் பிடித்துக்கொண்டேன். இனி எங்ஙனம் என்னைவிட்டு நீங்குவை'' என்கின்றது இத்திருப்பாடல்.*

*தன் குழந்தையின் பசி வேளையினை அறிந்து பால் ஊட்டுகின்ற தாயினைப் பார்க்கினும் மிகவும் என்மீது இரங்கி, தீவினையேனுடைய உடல் நீங்குமாறு அதனை உருகுவித்து, உள்ளத்தின் கண்ணே அறிவாகிய ஒளியை வளர்த்து, என்றும் வற்றுதல் இல்லாத பேரின்பமாகிய தேனினைப் பொழிந்து இடந்தோறும் என்னுடன் திரிந்த செல்வப்பொருளே, சிவபெருமானே, யான் உன்னை விடாது இறுகப் பற்றி கொண்டேன், ஆதலால் இனி என்னை விட்டு எங்கு எழுந்தருளிச் செல்வது?*

*நினைந்து ஊட்டுதல் - பச்சிளங் குழவிக்குத் தாய் காலமறிந்துதானே ஊட்டுதல், ஊன் - உடம்பு, ஊனினை உருக்கி - உள்ளமேயன்றி, ஒளி- உயிரினது அறிவு, அதனுள் ஒளியாய் நிற்பது - சிவம், உவப்பு - அளிவு, வற்றுதல், தொடர்ந்து - முயன்று சிந்தித்து தெளிந்து, சிக்கென - உறுதியாக.*

**(ஆ) தலம் - தில்லை**

திருச்சிற்றம்பலம்
தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்
சங்கரா ஆர் கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்டவெம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யானிதற் கிலனோர் கைம்மாறே
திருச்சிற்றம்பலம்

**பொழிப்புரை :** என்னுடைய தந்தையே! என்னையாளுகின்ற இறைவனே! அடியேனுடைய உடலை உனது திருமேனியாகக் கொண்டவனே! எனது உள்ளத்துள்ளேயும் நீ எழுந்தருளியிருக்கும் கோயில் கொண்டு எப்பொழுதும் வீற்றிருக்கின்ற இறைவனே! திருப்பெருந்துறையில் கோயில் கொண்டுள்ள எம்பெருமானே! தேவரீர் அடியேனுக்கு மெய்யறிவினைக் கொடுத்து, அதற்குப் பதிலாக எனது சீவ போதத்தைப் பெற்றுக் கொண்டாய். இப் பண்டமாற்றில் நான் அளவில்லாத பேரின்பத்தைப் பெற்றுக் கொண்டேன். ஆனால் , என்னிடமிருந்து தேவரீர் பெற்றுக் கொண்டது ஒன்றுமேயில்லை. எனவே, நம்மிருவரில் யார் திறமையாளர்? இங்ஙனம் எனக்குப் பேரின்பப் பெருவாழ்வைத் தந்ததற்குக் கைமாறாக, உதவுவதற்கு என்னிடம் ஒன்றும் இல்லை.

பதவிளக்கம் : சதுர் - திறமையாளர்; அந்தம் - முடிவு; ஆனந்தம் - பேரின்பம், இன்பம்; என்பால் - என்னிடம்; சிந்தை - உள்ளம்; எந்தை - என்னுடைய தந்தை.

**5. திருவிசைப்பா**

**தலம் – திருவீழிமிழலை** **பண் – பஞ்சமம்**

திருச்சிற்றம்பலம்
கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளங்
குளிரவென் கண்குளிர்ந் தனவே.
திருச்சிற்றம்பலம்

**பொழிப்புரை:**

ஞான நூல்களைக் கற்று உணர்ந்தவர்கள், உணர்ந்து அனுபவிக்கின்ற கற்பகக் கனியாக இருப்பவர் சிவபெருமான். எல்லையில்லாத அருட்பெருங் கருணைக் கடல் மெய்ஞான நூல்கள் கல்லாதவர்களால் அறிந்து கொள்ள முடியாத மாணிக்கமலை. தம்மை மதித்து வழிபடுவோரது மனதிலே தூண்டாமணி விளக்குப்போல பிரகாசிப்பவர். பகை கொண்டு எழுந்து அசுரர்களது முப்புரங்களையும் அழித்தவர். திருவீழிமிழலை என்னும் தலத்தில் வீற்றிருக்கின்ற வெற்றியாளர். அவரைக் கண்டு என்மனம் ஆனந்தத்தில் குளிரக் கண்கள் குளிர்ந்தன.

**6.திருப்பல்லாண்டு**

**தலம் - கோயில் பண் - பஞ்சமம்**

திருச்சிற்றம்பலம்
பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தப்பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்று அருள்
செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.
திருச்சிற்றம்பலம்.

நடராசப் பெருமானுடைய சிறப்புகளைக் கூறி அவன்''பல்லாண்டு வாழ்க''என வாழ்த்துக்கூறுவதாக அமைந்திருக்கின்றது இப்பாடல்.

வியாக்கிரபாதர் என்னும் புலிக்கால் முனிவரின் குழந்தையாகிய உபமன்னியு பசியினாற் பாலை விரும்பி அழுதலும், அவருக்கு பாற்கடலையே அழைத்து உண்ணக் கொடுத்தருளிய பிரானும், வீட்டுணவுக்கு சக்கரப் படையைக் கொடுத்தருளிய இறைவனும், வேதங்களை இடைவிடாமல் ஓதி ஒலிக்கும் அந்தணர்கள் வாழ்கின்றதும், என்றும் நிலைபெற்று இருப்பதுமாகிய சிதம்பரத்தின் கண்ணேயுள்ள சிற்றம்பலம் என்னும் பொருட்சபையைத் தமக்கு இடமாகக் கொண்டு (அன்பர்களுக்கு) அருள் புரிந்து ஆனந்தத் தாண்டவம் புரிய வல்லவனும் ஆகிய சிவபெருமானைப் புகழ்ந்து '' 'பல்லாண்டு வாழ்க' எனக் கூறி நாம் வாழ்த்துவோமாக.

பாலகன் - வியாக்கிரபாத முனிவரின் குழந்தையாகிய உபமன்னியுவைக் குறிக்கின்றது. வேண்டி - விரும்பி, மன்னிய-நிலைபெற்ற, ஆலிக்கும் - ஆரவாரிக்கின்ற,அந்தணர் -சிதம்பரத்திற் பூசை வழிபாடுகள் செய்யும் (தீட்சிதர்கள் என்னும்) பிராமணர்கள் மூவாயிரவர் பாவித்து -அருள் புரிந்து, நட்டம் - நடனம்.

**7. திருமந்திரம் - பத்தும் திருமுறை திருமூலர் பாடியது**

யாவருக்கு மாமிறை வற்கொரு பச்சிலை
யாவருக்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவருக்கு மா முண்ணும் போதொரு கைப்பிடி
யாவருக்கு மாம்பிறர்க் கின்னுரை ஏதானே

**பொழிப்புரை:**
யாவர்க்கும் நன்மையாகும் இறைவனுக்கு ஒரு பச்சிலை இட்டு வணங்குதல் வேண்டும். எல்லோருக்கும் பால்கொடுக்கும் பசுவுக்கு பசும் புல்லையாயினும் கொடுங்கள். சாதிபேதம் பாராது பசி என்று வந்தோர்க்கு நீங்கள் உண்பதற்கு முன்னர் ஒருபிடி சோறாவது கொடுங்கள். பிறருக்கு இன்னுரை பேசுதல் யாவர்க்கும் நன்மை யாகும்.

**8. பதினோராம் திருமுறை கபில தேவர் பாடியது.**
**மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை**

திருவாலவாயுடையார் தொடக்கம் நம்பியாண்டார் நம்பி வரையிலான பன்னிருவர் பாடிய பிரபந்தங்கள் பதினோராம் திருமுறையில் உள்ளன. அவற்றில் கபிலதேவ நாயனாரால் பாடப்பட்ட பிரபந்தம் 'மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை' ஆகும். இப்பிரபந்தம் விநாயகப் பெருமானைப் பற்றிப் பாடப்பட்ட பக்தி இலக்கியமாகும். சிவபெருமானின் மூத்த பிள்ளை ஆகிய விநாயகரையே, மூத்தநாயனார், மூத்தபிள்ளையார் என்ற தொடர்கள் குறிப்பிடுகின்றன. மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலையில் இருபது பாடல்கள் உள்ளன. அவற்றில், விநாயகப் பெருமானை வணங்குவதன் அவசியத்தை ''விநாயகனே வெவ்வினையை......'' எனத் தொடங்கும் பாடலின் ஊடாக அறிவோம்.

திருச்சிற்றம்பலம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

திருச்சிற்றம்பலம்

**பொழிப்புரை:**
விநாயகப் பெருமான் கொடிய வினையினை அடியோடு அறுக்க வல்லர்; எம்மிடமுள்ள ஆசை, அவா என்பவை எம்மை ஆட்டுவிக்காமல்; அவற்றைத் தணிப்பவர்; அவரே மண்ணுலகம், விண்ணுலகம் என்பவற்றுக்கும் தலைவராக உள்ளார். ஆகையால், அவரை அன்புடன் பணிந்து போற்றுவோம்.

பன்னிரண்டாந் திருமுறையாக விளங்குவது சேக்கிழார் குடியிற் பிறந்த அருண்மொழித்தேவர் இயற்றிய திருத்தொண்டர் புராணமாகும். இது ஆளுடைய நம்பி எனப்படும் சுந்தரர் வரலாற்றின் மூலம் சிவனடியார்களின் வரலாற்றைத் தொடர்பு புலப்படக்கூறுவதால் ஆளுடைய நம்பி புராணம் என்றும் கூறப்படும்.

மேலும், பிறர் செய்தற்கு அறியச் செயல்களைச் செய்த 'பெரியார்' வரலாற்றைக் கூறலால் பெரிய புராணம் என்னும் பெயர் வழக்கையும் அது பெற்றுள்ளது. மேலும், சிவனடியார் வரலாற்றை கூறும் சுந்தரரின் திருத்தொண்டர் தொகை, நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதி , திருநாவுக்கரசர் திருவேகாதசமாலை , சம்பந்தர் திருவந்தாதி போன்ற இலக்கியங்களை விட விரிவாகக் கூறும் பெரிய வரலாற்றுக் காப்பியமாதலால் பொருத்தம் உடையதே ஆகும். '' உலகெல்லாம் உணர்ந்து ஓதற்கரியவன்'' என்னும் தெய்வீக அசரீரி வாக்கை தொடக்கமாகக் கொண்ட பெருமையும் 'பெரிய புராணம்' என்ற நூற் பெயர் வழக்கிற்கு உகந்தது ஆகும்.

சேக்கிழார், காவிய மரபுக்கு இணங்க நாட்டுச் சிறப்பும், நகரச் சிறப்பும் சங்களைப் பெரியபுராணத்தின் தொடக்கப் பாகத்தில் உள்ளடக்கியுள்ளார். ''தண்ணளி வெண்குடை......'' எனத் தொடங்கும் பாடல் இத் தொடக்கப் பாகத்தில் திருவாரூர், திருநகரச் சிறப்புக் கூறும் பகுதியில் உள்ளது.

**9.பெரியபுராணம்**

திருச்சிற்றம்பலம்

தண்ணளிவெண் குடைவேந்தன் செயல்கண்டு தரியாது
மண்ணவர்கண் மழைபொழிந்தார் வானவர்பூ மழை சொரிந்தார்
அண்ணலவன் கண்ணெதிரே யணிவீதி மழவிடைமேல்
விண்ணவர்கள் தொழநின்றான் வீதிவிடங்கப் பெருமான்.

திருச்சிற்றம்பலம்

**பொழிப்புரை:**

மநுநீதிகண்ட சோழனின் அபூர்வ நீதிச் செயலைக் கண்டு மக்கள் மனம் பொறுக்காது கண்ணீர் பெருக்கினார்கள். தேவர்கள் மலர்மழை பொழிந்தார்கள். அப்போது சிவபிரான் இடபாரூடராகத் தேவர்கள் வணங்க, மநுநீதிகண்ட சோழனுக்கு வீதியிற் காட்சி வழங்கியருளினார்.

**பயிற்சிகள்**

1. 'குனித்த புருவமும்' என்ற தேவாரத்தில் குறிப்பிடும் நடராச வடிவத்தைக் குறிப்பிடுக.
2. தேவாரம் என்றால் என்ன?
3. திருவாசகத்தின் சிறப்புக்கள் யாவை?
4. திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம் என்பவற்றைப் பாடியவர்கள் யாவர்?
5. பெரியபுராணத்தின் சிறப்புகள் மூன்று எழுதுக.
6. உமது பாடநூலில் தரப்பட்டுள்ள தேவாரங்கள் பாடப்பட்ட திருத்தலத்தினையும் அவற்றுக்குரிய பண்ணையும் எழுதுக.

**செயற்பாடு**

★ பாடப்புத்தகத்தில் குறிப்பிட்ட திருமுறைப்பாடல்களை வகுப்பறையில் நிகழ்த்திக் காட்டுக.
★ திருமுறைப்பாடல்களின் சிறப்பைப்பற்றி 5 நிமிடப் பேச்சினை வகுப்பறையில் நிகழ்த்திக் காட்டுக.
★ பன்னிரு திருமுறைகளும் அவற்றைப் பாடியோரையும் அட்டவணைப்படுத்தி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.